முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் ஆசி நூல்**

**(விகாரி ஆவணி மாதம் 1ம் திகதி முதல் ஆவணி மாதம் 8ம் திகதி வரை ஆகஸ்ட் 18ம் திகதி முதல் ஆகஸ்ட் 25ம் திகதி வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

**1.** சர்வபலம் கொண்ட சடாட்சரா
சகலருக்கும் அருளும் சடாட்சர
சர்வ சூட்சுமம் தந்த முருகா
சற்குருவாக அரங்கமகானை நீ படைத்து

**2.** படைத்துமே கலியுகம் காக்க
பரோபகாரமே சன்மார்க்கமாக தந்து
தடையற அரங்கனாய் நீ இருந்துமே
தவசியாய் கேட்க இந்தியா தமிழகம் தன்னில்

**3.** தன்னிலே விகாரி யாளி திங்கள் தன்னில்
தக்க ஏக திகதி மேல் அட்டமதிகதி வரை
(விகாரி வருடம் ஆவணி மாதம் 1ம் நாள் 18.08.2019, ஞாயிறு முதல் ஆவணி மாதம் 8ம் நாள் 25.08.2019, ஞாயிறு முடிய)
இன்னாட்களில் நடக்கும் நிகழ்வாக
எதிர்கால பலனை அகத்திய மகரிஷி யானும் உரைப்பேன்

**4.** உரைக்கவே இந்தியா தன் செயலால்
உலகை வியக்கச் செய்வது உறுதி
குறைவாக எண்ணிய அண்டை நாடுகள்
குழப்பம் கண்டு பகை வஞ்சம் செயலில்

**5.** செயலில் எதிர்மறை காண நேரும்
சேவையென இறங்கிய உயர்செயலில்
தயவுபட இறைசக்தி துணைபட
தாயகம் இந்தியா தலை நிமிரும்

**6.** தலை நிமிரும் தன் எல்லை பிரச்சனையில்
தாமுரைக்க ஆனாலும் தீவிரவாத வகை
நிலைபடா சில இடர்கள் தானும்
நிகழ்வாக வந்து அகல நேரும்

7. நேருமைபட தமிழகம் தன் செயலில்
நிலமதனில் நடுவண் துணைபட
வறுமை வெல்லும் உதவி நன்மைக்கு
வழிவகையை தேடி வர நலம்

8. நலமிலா எதிர்மறை விமர்சனங்கள்
நடுவணிடம் தமிழகம் பின்னடைவு பெறும்
பலம் பெற இந்தியா தன் உணர்வை
பாரம்பரிய நாட்டுப் பற்றை வளர்க்கும்

9. வளர்க்கும் தேசநல சேவையில்
வளர்ச்சி மேன்மேலும் கொண்டு
தளர்வின்றி இந்தியா தமிழகம் செயல்பட
தண்டபாணி தெய்வம் துணைபட மேம்படும்

10. மேம்பாடான நலத்திட்டங்கள் தன்னை
முக்கியமாக நீர் வளங்களை காக்க
நம்பகம் தந்து செயல்பட்டால்தான்
ஞான பூமி தமிழகம் நிலை உயரும்

11. உயர்வு தந்திட உண்மை ஞானமருளும்
உயர் ஞானி ஆறுமுக அரங்கன்
தயவுமிக்க ஞான கொள்கை வழி
தமிழக இந்திய மக்கள் வர தமிழகம் இந்தியா தனித்துவம் பெறும் வார ஆசி முற்றே.

—சுபம்—

**முருகப்பெருமான் துணை**

**மகான் அகத்தியமகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :**

**விகாரி வருடம் ஆவணி மாதம் 1ம் நாள் 18.08.2019, ஞாயிறு முதல் ஆவணி மாதம் 8ம் நாள் 25.08.2019, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் இந்தியாவிலும் தமிழகத்திலும் நடக்க இருக்கும் நிகழ்வுகள்**

சகலவிதமான ஆற்றல்களையும் பெற்றுள்ள சடாட்சரனே முருகப்பெருமானே எல்லா மக்களுக்கும் அருள் செய்து காக்கின்ற முருகப்பெருமானே சரவணபவனே எல்லா சூட்சுமங்களையும் அருள் செய்து காக்கின்ற மகா ஞான சற்குருவாக உள்ள ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை தாம் படைத்து இந்த கலியுகத்தினை காத்திடவே பரோபகாரமான ஜீவதயவுமிக்க சன்மார்க்க நெறியினை உலகிற்கு அளித்து சன்மார்க்கம் உலகமெங்கும் பரவிட ஆறுமுக அரங்கமகானாய் சார்ந்து இருந்து உலகம் நலம் பெறவே உமது பெருமை கூறி இந்தியாவிலும் தமிழகத்திலும் விகாரி வருடம் ஆவணி மாதம் 1ம் நாள் 18.08.2019, ஞாயிறு முதல் ஆவணி மாதம் 8ம் நாள் 25.08.2019, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தின் நிகழ்வுகளை வார ஆசி நூலாக அகத்தியர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்தியமகரிஷி.

இந்திய தேசம் தமது அற்புதம் மிக்க செயல்பாடுகளினால் இனி உலகினை வியப்படைய செய்வது உறுதியப்பா. இந்திய தேசத்தினை அதன் வல்லமைகளை குறைவாக மதிப்பிட்ட தேசங்களெல்லாம் அண்டை நாடுகளெல்லாம் இந்தியாவின் வல்லமைமிக்க செயல்பாடுகளால் குழப்பமுற்று இந்திய தேசத்தின் வளர்ச்சியை தடுக்க நினைத்து பகையும் வஞ்சகமும் கொண்டு செயல்பட்ட அவை வெற்றி பெறாமல் தோல்வியையே சந்திக்கும். மக்களின் நலன் கருதி சேவை மனப்பான்மையுடன் செயல்படுகின்ற இந்திய தேசம் அதன் உயர்வான செயல்களில் ஞானிகளின் துணையுடன் இறைசக்திகளின் துணையும் பெற்று உலகினில் இனி தலைநிமிர்ந்து நிற்குமப்பா.

இந்திய தேசம் தமது எல்லை பிரச்சனைகளில் வல்லமையுடன் செயல்பட்டு தலைநிமிர்ந்து நிற்கும். ஆனாலும் தீவிரவாத செயல்களினால் சிலவிதமான துன்பங்களை இடையூறுகளை இந்திய தேசம் சந்திக்கக் கூடும். ஆயினும் அந்தவித இடையூறுகள் எல்லாம் விரைவில் அகன்றுவிடும்.

தமிழக அரசு தமது செயல்பாடுகளில் மத்திய அரசின் துணையோடு செயல்பட்டு வறுமையை வெல்லும் வழிவகைகளை தேடி செயல்படுத்தினால் தமிழகம் விரைந்து முன்னேறும். மத்திய அரசுடன் தமிழகம் தற்சமயம் இணக்கமான போக்கை மேற்கொள்ள வேண்டும். எதிர்மறை விமர்சனங்களை செய்திட்டால் மத்திய அரசின் ஆதரவு குறைந்து தமிழகம் பின்னடைவைக் காண நேர்ந்திடும்.

இந்திய தேசம் பலம் பெறும் வகையில், தனது இந்திய தேச உணர்வினை பெருக்கி பாரம்பரியமான தேசப்பற்றினை வளர்த்திடும். இந்திய தேசத்தின் தேச நலச் சேவையில் மேன்மேலும் வளர்ச்சி அடையும். தளர்ச்சியின்றி தொடர்ந்து இந்தியாவும் தமிழகமும் தர்மத்தின் வழியில் நடந்திட முருகப்பெருமானின் துணையால் மேம்பாடு அடையும்.

மக்களுக்கு மேம்பாட்டையும், முன்னேற்றத்தையும் தந்தருளும் நலத்திட்டங்களை முக்கியமாக நீர்வளங்களை காத்திடுவதோடு உலக மக்களுக்கு நம்பகம் தந்து இனி செயல்பட்டால்தான் ஞானபூமியாகிய தமிழகம் வளர்ச்சி அடையும்.

மக்களெல்லாம் உயர்ந்த நிலையை அடைந்திடவே உண்மை ஞானம் தந்து அருள் செய்து காக்கின்ற உயர் ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனை ஏற்றுக் கொண்டு அரங்கன் கூறும் உபதேசங்களை ஏற்று அரங்கரை பின் தொடர்ந்து மக்கள் வழிபட்டு வரவர, இந்தியாவும் தமிழகமும் தனித்துவமான நிலையை அடைந்து சிறப்படையும் எனக் கூறுகிறார் மகான் அகத்தியர் பெருமான் தமது வார ஆசி நூல் மூலம் உலகறிய.

—சுபம்—